சரசுவதி மகால் வெளியீடு எண். 309.

தேரர் அருளிச்செய்த

# சிறுநீர்க்குறி சோதனை

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

1990

விலை ரூ. 5-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 309.

# தேரர் அருளிச்செய்த
# சிறுநீர்க்குறி சோதனை

**

பதிப்பாசிரியர்:

டாக்டர் ஆ. சண்முகவேலன், M. A., B. O. L.,
சித்த மருத்துவ ஆராய்ச்சி ஆபீசர்,
மத்திய அரசாங்க இந்திய வைத்திய நூல் ஆராய்ச்சித் துறை,
சரசுவதி மகால், தஞ்சை.

வெளியிடுபவர் :
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

1990 [விலை ரூ 5—00

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | ... | Urine Test Diagnosis |
| Editor | ... | Dr. A. Shanmugavelan, M.A., B.O.L., |
| Publisher | ... | Director; Sarasvati Mahal Library |
| Publication No. | ... | 309 |
| Language | ... | Tamil |
| Edition | ... | II Edition |
| Date of Publication | ... | Nov. 1990 |
| Paper used | ... | 14 2 Kg. Seshasayee |
| Size of the Book | ... | 21 × 14 cm. |
| Printing Type used | ... | 12 pt. |
| Number of pages | ... | 40 |
| No. of copies | ... | 1000 |
| Price | ... | Rs. 5/- (Rupees Five only) |
| Printer | ... | Sarasvati Mahal Library Press |
| Binding | ... | Card Board |
| Subject | ... | Siddha Medicine |

# PREFACE

The Siddha medical system is indigenous to Tamilnad and there is a considerable volume of very valuable material, yet in the hands of private individuals and institutions which would have to be gathered to provide ample material for study and research. Besides the large number of manuscripts available in the Sarasvati Mahal Library, many others have also been secured from outside and are being scrutinized and studied in our Literary (Medical) Research Unit. It has been keenly felt that considering the vast bulk of Siddha medical lore which has not received that amount of study which is needed, and the imperative need for bringing out the very valuable and unique methods available in this system, greater attention has to be focussed on the study and research of Siddha Medical Literature.

Since almost all the Siddha medical works are written in classical Tamil, the object of the Literary Research Unit of the Sarasvati Mahal Library is to translate the Siddha medical works into Sanskrit, English and Hindi, so that the medical men all over India may be able to avail themselves of other systems of medicine and an integrated approach to the treatment of diseases by a synthesis of all these indigenous methods may be possible.

One such work is the 'Therar Nirkuri and Neikkuri', which is a small treatise in Tamil verses, on the examination of urine. This is a very unique method, found exclusively in Siddha system, because it deals with the diagnosis of all kinds of diseases by the symptoms noticed in the urine. As it was already resolved by the Sub-committee of the Central Council of Indigenous Research, Sarasvati Mahal, Thanjavur, that some of the small works might be published in the T. M. S. S. M. Library Journal, this work is being now published through the Journal.

The verses in Therar Nirkuri and Neikkuri are in lucid and easy Tamil, and the prose rendering by our Siddha Research Officer, Thiru A. Shanmugavelan, M. A., B. O. L., is simple and clear. We record here our profound appreciation for the Siddha Research Officer of the Literary Research Unit who has edited, with Tamil notes, the valuable work in a scholarly manner through our Library Journal. The prose rendering brings the precious and useful knowledge contained in the work within the easy reach of all the doctors.

It is our fervent hope that not only the practitioners of Ayurvedic, Siddha and other systems of medicine but also the general public of the Tamilnad will derive the fullest benefit of this publication.

**O. A. NARAYANASWAMI,**
*Honorary Secretary,*
*T. M, S. S: M. Library,*

**Thanjavur,**
**1—10—1967.**

# ஆசிரியரின் முன்னுரை

" சிறுநீர்க்குறி சோதனை " பற்றிய ஆராய்ச்சி வெளியீடு இது. இதை இயற்றியவர் தேரர் என்னும் சித்த மருத்துவப் புலவர், தமிழ் முனிவர் அகத்தியர் கூறியதை அடிப்படையாகக்கொண்டு தேரர் இந்நூலை இயற்றியதாகக் கூறுகின்றார். இதனை தேரர் கூறிய கீழ்வரும் பாடலிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

" இவ்வித மூத்திரத்தி னிலக்கண முற்று மந்தச்
செவ்விய மருத்து முன்னூல் செப்பிய வகைகளெல்லாம்
நவ்விபோல் விழியினாளே; நாட்டின் மானிடருக்காக
அவ்விய மில்லா நெஞ்சத் தகத்திய னுரைத்ததாமே "

எனவே பண்டைக் காலத்திலேயே சிறுநீரின் நிறம் குணம், குறி முதலியவைகளை அறிந்து நோய் இன்னதென்று கண்டுபிடிக்கும் முறை இருந்துவந்தது என்பது இதனாற் தெரிகிறது. உலகில் வேறு எங்குமுள்ள வைத்திய முறையில் காணப்படாத முறைகளை இதில் காண்கின்றோம். இது மிகவும் பெருமிதப்படக்கூடிய செய்தியாகும். தமிழ்ச்செய்யுட்களில் இயற்றப்பட்டுள்ள இந்நூலை உரைநடையில் சுருக்கமாகவும், விளக்கமாகவும் எழுதினால் எல்லோருக்கும் பயன்படும் என்னும் நோக்கத்தோடு அது வெளியிடப்படுகின்றது. மேலும் இதனை ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் மொழிபெயர்த்தால் விஞ்ஞான முறையில் ஆராய்ச்சிக்கும் பயன்படும் என்பது கருத்து.

அகத்தியர் மாணாக்கர்களில் தேரையர் என்னும் ஒருவர் இருந்தார் என்பதை நூல்களின் வாயிலாகத் தெரிந்து கொள்கின்றோம், முற்காலத்தில் இருந்த அரசர் ஒருவருக்கு மருத்துவம் செய்தபோது, அவரின் கபாலத்தி

ணுள் தேரை ஒன்று இருப்பதை அறிந்து அகத்தியமா முனிவர் அறுவை வைத்தியம் செய்து தேரையை வெளிப் படுத்த முயன்றார். அறுவைக்குப்பின்னர், தேரையை எப்படி வெளிப்படுத்துவது என்று அவர் திகைத்துக் கொண்டிருந்தபோது, அருகில் நின்ற மாணவர் நீர் நிறைந்த தட்டினை ஏந்த அதில் தேரை பாய்ந்ததென்றும், மாணாக் கரின் அறிவுக்கூர்மையை அறிந்த குருபகவான் அகத்தியர் அம்மாணாக்கருக்குத் தேரையர் என்று பெயர் சூட்டியதாக வும் வரலாற்றுச்செய்தி கூறுகின்றது. எனினும் அக்காலத் தில் தேரையர் இயற்றிய நூல் எதுவும் நமக்குக் கிடைக்க வில்லை. எனவே, இந்தநூல் அகத்தியர் மாணாக்கர் தேரையர் எழுதிய நூல் என்று கருதுவதற்கு இடமில்லை. இது பிற்காலத்தில் வாழ்ந்த தேர் என்ற பெயருடைய ஒருவரால் எழுதப்பட்டுள்ளது. தேரையர், தேரர் என்ற இரண்டு சொற்களின் ஒற்றுமையை நோக்கி தடுமாற்றம் கொள்ளும்படியாக உள்ளது பிற்காலத்தில் வாழ்ந்த இவர் வைத்தியத்துறையில் தேர்ந்தவராதலின் தேரர் என்று அழைக்கப்பட்டார், இந்நூல் செய்த தேரர், கூரம் எனும் ஊரிலிருந்த தருமசௌமியர் என்பவரை ஆசிரிய ராகக் கொண்டு மருத்துவம் கற்றவர். தரும சௌமியர் என்னும் பெயர் பௌத்த மதத்தைச் சார்ந்தவராயிருக்க லாமோ என்று எண்ண இடந் தருகின்றது. ஆனால் தேரர் சிவப்பற்றுடையவர் என்பது அவர் பாடிய கடவுள் வாழ்த்து முதலிய குறிப்புகளிலிருந்து தெரிந்து கொள்ள லாம். முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் தொண்டை நாட் டில் பால் ஆற்றின் வடகரையிலுள்ள திருமலைச்சேரி என்னும் ஊரில் பிறந்தவர். நம்பிபூபதி எனும் வேளாள ரின் அருமைத்திருமகன். இளமையிலேயே தமிழிலுள்ள இலக்கண இலக்கிய நூல்களையும், சித்த மருத்துவ நூல்க ளையும், நன்கு கற்றுத் தேர்ந்தவரி, தொண்டைநாட்டு மன்னரின் உதவியும் கிடைக்கப்பெறறவர். இவர் இயற்றிய நூல்கள் மொத்தம் பதினான்கு. அதில் தேரர் நீர்க்குறி, நெய்க்குறி என்ற இந்த நூலும் ஒன்றாகும்.

1. தேரர் சிகாமணி வெண்பா 2. தேரர் நிகண்டு. 3. தேரர் சேகரப்பா 4. தேரர் காப்பியம் 5. தேரர் தரு 6. தேரர் நாடகம் (மருத்துப் பாரதம்) 7. தேரர் அந்தாதி 8. தேரர வண்ணம் 9. தேரர் நாள்மாலை 10. தேரர் யமக வெண்பா 11. தேரர் எதுகைப்பா. 12. தேரர் கரிசல் 13. தேரர் தைலவருக்கம் 14. தேரர் நீர்க்குறி, நெய்க்குறி.

தேரர் உண்மையிலேயே வைத்தியத்துறையில் நன்கு தேர்ந்தவர் என்பது அவர் இயற்றிய நூல்களிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். பாடல்கள் பாடுவதிலும் வல்லவன்,

அகத்தியர் கூறிய சிறுநீர்க்குறி முதலியவைகளையும் அறிந்து சித்தசாரணவம், சித்தியவித்தியாதரப், நித்திய நாதீயம், மாதவ கற்பம் போன்ற வேறு பல நூல்களி லுள்ள குறிப்புகளையும் ஆராய்ந்து இந்நூலை இயற்றி யுள்ளார் என்பது தெரிகின்றது.

சிறுநீரில் எண்ணெய்த்துளி விட்டுப்பார்க்குங்கால் கண்ணாடி, எருது, வெற்றிலை குதிரை ஆகிய குறிகள் காணப்பட்டால் நோய் தீருமென்று ஒரு செய்யுளில் கூறப் பட்டுள்ளது. அதே குறிகள் கண்டால் நோய் தீராதென்று மற்றொரு செய்யுளில் கூறப்பட்டுள்ளது. இது போன்ற இடங்கள் ஆராய்வதற்குரியன. ஒவ்வொரு நோயிலுங் காணப்படும் சிறுநீர் விகற்பத்தினை அகர வரிசையில் முடிவில் இணைத்துள்ளோம். இது ஆராய்ச்சியாளருக்கு மிகவும் உதவியாக இருக்கும். சிறுநீர்க்குறி பற்றிய சோதனை விஞ்ஞான முறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கும் இக்காலத்தில் இதுபோன்ற பழமையான நூலில் அடங்கியுள்ள கருத்துக்களையும் ஆராய்ந்து அறிந்து பயன்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இதனை எழுதலானேன்.

இதனை அன்புடன் வெளிப்படுத்துதவிய தஞ்சை சரசுவதி மஹால் நிர்வாகக் காரியதரிசி உயர்திரு ஓ. ஏ நாராயணசுவாமி, பி. ஏ., பி. எல்., அவர்களுக்கும் மேற்படி நூல்நிலையக்காப்பாளர் உயர்திரு வி. கோபால ஐயங்கார், எம். ஏ., அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

இத்தகைய ஆராய்ச்சியில் என்னை ஊக்கப்படுத்தியவரும் பாளையங்கோட்டை இந்திய வைத்தியக் கல்லூரி முதல்வர் டாக்டர் க. சு. உத்தமராயன், எச். பி, ஐ. எம்., அவர்களுக்கும், சென்னை டாக்டர் வி. நாராயணசுவாமி, எச். பி. ஐ. எம். அவர்கட்கும் தஞ்சை இந்திய வைத்தியத் துறை ஆயுள்வேத ஆராய்ச்சிப் பேராசிரியர் உயர்திரு வி. எஸ். வேங்கடசுப்ரமணிய சாஸ்திரிகள் அவர்களுக்கும் என் அன்பு உரியதாகுக.

ஆ. சண்முகவேலன்,
சித்த வைத்திய ஆராய்ச்சிப் பேராசிரியர்,
இந்திய வைத்திய ஆராய்ச்சித்துறை,
சரசுவதி மஹால்,

தஞ்சை

24—9—1967.

டாக்டர் க. சு. உத்தமராயன்,
எச். பி., ஐ. எம்.,
முதல்வர்
அரசாங்க இந்திய வைத்தியக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

# மதிப்புரை

நீர்க்குறி, நெய்க்குறி என்னும் இந்நூல் தேரரால் இயற்றப்பட்ட நூல்; வைத்தியத் துறையில் தேர்ந்தவரென மதிக்கப்பட்டதால், தேரர் என்பது சிறப்புப் பெயராக இருக்கலாம். சித்த மருத்துவத்துறையில் இது ஒரு நல்ல நூல். இவர் இயற்றிய நூற்களில் ஒன்றாகிய கரிசலில் "உத்தமமஞ்சிவாடுகமி நீவென வேமனர் வடுகில் உரைத்தல் போல" எனக்கூறியிருப்பதிலிருந்து இவர் வேமனருக்குப் பிற்பட்டவராகவோ, அல்லது சமகாலத்தவராகவோ இருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் எண்ணுகின்றனர். வேமனர் காலம் சுமார் 300 ஆண்டுக்கு மேற்பட்டது. எனவே, தேரருடைய காலம் ஏறக்குறைய 350 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கருதலாம்.

இவர் எழுதிய நூற்களின் தொகுப்பைக் குறிக்கும் பாடல் இது!

" சிகாமணி வெண்பா நிகண்டு சேகரப்பா
தேரையர் காப்பியந்தரு நாடக மந்தாதி
மிகா வண்ணம் நாண் மாலை யமகவெண்பா
விளங்கெதுகைப் பாயிவை யெல்லோரு மெச்சு
மகா மகிமைக் கரிசலெனு முறை யீராறும் "

இதனால் தேரர் இயற்றிய நூற்கள் பன்னிரண்டு என்று தெரிந்துகொள்ளுகிறோம். மேலும் இதில் கூறப்

படாத நூற்களில் "தேரர் தைல வருக்கமும்", "தேரர் நீர்க்குறி நெய்க்குறியு" மாகும். இவை இரண்டும் தேரரால் பிற்காலத்தில் செய்யப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகின்றது.

நோய்களைக் கணிப்பதற்குச் சித்த மருத்துவ முறையில் கூறப்பட்ட எண்வகைத் தேர்தலாகிய நாடி, பரிசம் நா, நிறம், மொழி, விரு, மலம், மூத்திரம் என்பவற்றுள் நாடி முதன்மையானது என்பது எல்லோராலும் கொள்ளப் பட்ட ஒரு முடிவு. அதற்கடுத்தபடியாகச் சிறுநீர்ச் சோதனையாகும்.

இச்சோதனையை "நீர்க்குறி நெய்க்குறி" என்ற தலைப்பிட்டு இச்சிறு நூலைச் சூத்திர வடிவமாக யாத் துள்ளார். இந்நூலில் சிறுநீரின் நிறம், எடை, மணம் நுரை குறைதல் என்பவற்றை நிதானித்தும், நெய்த்துளி (எண்ணெய்த்துளி)யைச் சிறுநீரில் விட்டு அதில் காணும் உருவங்களைக்கொண்டும், நோய் இன்ன குற்றத்தினால் ஏற்பட்டதென்பதையும், தீரும், தீராது என்பது பற்றியும் விளக்கமாகக் கூறப்பெற்றிருப்பதால், நோய் நிதானத் திற்கு இந்நூல் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை.

இந்நூல் சித்த மருத்துவம் கற்கும் மாணவர்கட்கும் மருத்துவர்கட்கும், பிணிகளைத் தேர்வதற்கு (நாடிக்கு) அடுத்தபடியாக) மிகவும் பயன்படும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இந்நூல் இப்போது அச்சில் இல்லை. ஆதலால் தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலைய சித்த மருத்துவ ஆராய்ச்சித்துறைத் தலைவர் டாக்டர் ஆ. சண்முகவேலன், எம். ஏ., அவர்கள் யாவருக்கும் விரைவில் விளங்குமாறு ஒரு தொகுப்புரை எழுதியுள்ளார்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெறுவதாக! தஞ்சை சரஸ்வதி மகால் நூல்

நிறையத்தார் அவர்களது திங்கள் வெளியீட்டில் இதனை வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்கட்கு என் நன்றி உரியதாகும்.

மேலும், வெளிவராத சித்த மருத்துவ நூற்களுக்கு உரை எழுதி வெளியிடுமாறு டாக்டர் ஆ. சண்முகவேலன், எம். ஏ., அவர்களை ஊக்குவைதுடன், அவர் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி நல்லமுறையில் யாவர்க்கும் பயன்பட எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன்.

**க. சு. உத்தமராயன்,**
முதல்வர்,
அரசாங்க இந்திய வைத்தியக் கல்லூரி.

பாளையங்கோட்டை,
15—6—67.

தேரர் அருளிச்செய்த

# சிறுநீர்க்குறி சோதனை

டாக்டர் ஆ. சண்முகவேலன், எம். ஏ.,
*(சித்த மருத்துவ ஆராய்ச்சி ஆபீஸர்,
மத்திய அரசாங்க ஆயுர்வேத நூல் ஆராய்ச்சித்துறை
சரஸ்வதி மகால், தஞ்சாவூர்,)*

வைத்தியர்கள், நோயாளர் தம் கைநாடி பார்த்து மட்டும் நோய் இன்னதென்று புரிந்துகொண்டபோதிலும் அதை உறுதிப்படுத்துவதற்கு சிறுநீர் சோதனை மிகவும் இன்றியமையாதது. கால வேகத்தில் நம் முன்னோர்கள் கூறி வைத்துள்ள இம்முறைகள் மறைந்து விடாதபடி, இது எல்லோருக்கும் பயன்படும் பொருட்டு ஆராய்ந்து வெளியிடப்பட வேண்டுமென்பதே நம் நோக்கம்.

இவ்வகையில் தமிழ் முனிவர் அகத்தியர் கூறிய சிறுநீர்க்குறி நூலை அடிப்படையாகக் கொண்டும் வேறு பல ஆசிரியர்கள் கூறிய குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டும் தேரர் இந்நூலை இயற்றியதாகக் கூறுகின்றார். அவ்வாறு அகத்தியர் இயற்றியருளிய நூல் நமக்கு இது வரை கிடைக்கவில்லை. சிறுநீர்க்குறி சோதனை பற்றிய நூல் இதைத்தவிர வேறு எதுவும் இல்லை என்று தெரிவதால், இந்நூல் மிக மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

## கடவுள் வணக்கம்

ஓங்காரத்தினின்றும் தோன்றிய விநாயகர் கடவுளையும், ஓங்காரத்தின் பொருளை உரைத்த முருகப் பெருமானையும், பார்வதியை இடப்பாகத்திலுடையவரும், யாவராலும் எண்ணுதற்கரியவருமான சிவபெருமானின் தாமரை

போன்ற அடிகளை, எம்மனத்தினால் இறைஞ்சி சிறுநீரின் நிறக்குறி இயலினை விளங்கச் சொல்லுவாம்.

## சிறுநீரின் நிறக்குறி

**சிறுநீரின் இலக்கணம்:** அறுவகைச் சுவையுள்ள உணவினை ஒன்றற்கொன்று வேறுபாடின்றியும், பசிக்கேற்ற அளவும், காலாகாலத்தில் உண்டு உறங்கவேண்டும். விடியற்காலையில் சிறுநீரைக் கண்ணாடிக்குவளையில் ஆவி போகாதவாறு செய்து, $1\frac{1}{4}$ மணி நேரத்திற்குள் அதன் நிறக்குறியையும் எண்ணெய்விட்டுப் பார்க்கும்போது காணப்படும் குறிகளையும் கவனிக்கவும். அதிலிருந்து பிணிகள் தீரும் தீராதென்று அறிந்து கொள்ளல் வைத்தியர்களின் தலையாய கடனாம்.

**சிறுநீரின் பொதுக்குணம்:** சிறுநீரின் நிறம், எடை மணம், நுரை, குறைதல் என ஐந்து இயல்கள் பற்றிக் கூறுவாம்.

**சிறுநீரின் நிறம்:** மஞ்சள், சிவப்பு, பச்சை, கருமை வெண்மை என்னும் ஐந்து நிறமுள்ளதாயிருக்கும். மஞ்சள் நிறம் ஆறு வகைகளாகவும், சிவப்பு நான்கு வகைகளாகவும், பச்சை ஐந்து வகைகளாகவும், கறுப்பு நான்கு வகைகளாகவும், வெண்மை இரண்டு வகைகளாகவும், பிரிக்கப்பட்டாமென்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

**மஞ்சள் நீரின் நிறவகை:** மழையில் நனைந்து ஊறிய வைக்கோலிலிருந்து இறங்குகின்ற நீரின் நிறத்தையுடைய சிறுநீர் சீரணக் குறைவால் உண்டானதாகும். சிறுநீர் துரிஞ்சிப்பழ நிறத்தை அடையுமானால் அது சீரண பக்குவத்தால் உண்டானதென்று அறியவேண்டும். சிறு நீர் சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறத்தை அடையுமானால் மிக்க வெப்பத்தால் விளைந்ததெனக் கொள்ளல் வேண்டும். காட்டு நாரத்தம் பழத்தோலின் நிறமாய் வெளிப்பட்டால் அது சூட்டைக் கொடுப்பதற்கான சிறுநீராகும். கொதிக்

கின்ற தீயின் நிறத்தையடைந்தால், சிறுநீர் மிகுந்த வெப்பத்தை அடைந்ததென உணரவேண்டும். மஞ்சள் நிறமும் அரைத்த குங்குமப்பூ நிறமும் வரிவரியாய்க் காணப்பட்டால், சிறுநீர் வெம்பத்தின் உச்சத்தை அடைந்ததாகக் கருதப்படும்.

**சிவப்பு நிறமுள்ள சிறுநீரின் வகைகள்:—** சிறுநீர் செம்மையும், கருமையும் கலந்த நிறத்தையுடையதாக இருந்தால், இரத்தம் பொங்குதலாகிய சிறுநீராகும். இரத்தக் கொதிப்பினால் இறங்கும் நீர் மிகுந்த செந்நிறமுள்ள பன்னீர்ப்பூ நிறத்தைக்காட்டும். இரத்தம் அதிகமாகப் பொங்கிய குறியைக்காட்டும் நீர், கருப்பும், அதில் சிறிது செம்மையும் கலந்த நிறமும், அல்லது தனித்த அதிக சிகப்பு நிறமும் உடையதாயிருக்கும.

**பச்சை நீரின் வேற்றுமை இயல்:** சிறுநீர் கறுப்பு நிறத்தையும், சிறிது பச்சை நிறத்தையும் அடைந்தால், சீதளத்தினாலான தென்றறிய வேண்டும். நஞ்சினால் ஏற்பட்ட சீதளம் அதிகரித்தால், நீர் ஆகாய நிறத்தையொத்திருக்கும்.

சிறுநீரில் நீலச்சாயை காணப்படுமானால், அது மிக்க சீதளத்தினாலுண்டானதென்று அறியவேண்டும். இந்நீர் பாலர்களுக்கும், கிழவர்களுக்கும் வாத நோயை உண்டாக்கும். நீர் தடித்து நீல நிறத்தில் காணப்பட்டால், அது வாத, பித்த, கபங்களைப் பாதிக்கும். நீர் இலைப்பச்சை நிறத்தை யொத்திருக்குமாயின், வாத பித்த கபங்கள் கெட, உண்டாகும் கொடிய நீராகும்.

**கருமை நிற வேற்றுமை:** நீரில், குங்குமப்பூ நிறத்துள் கருமை நிறம் தோன்றினால், அந்நீர் காமாலை அல்லது பித்தநோய்க்குக் காரணமாகும். இன்னும் குங்குமப்பூ நிறத்துடன் கலந்த கருமையோடு செம்மையும் சேர்ந்திருந்தால் அது இரத்தக் கெடுதியைக் காட்டும்.

சிறுநீரில் கருமையும், சிறிது பச்சை நிறமும் கலந்திருந்தால் அது இரத்தத்தில் அழுக்கு சேர்ந்திருப்பதைக் குறிக்கும். கருமையும், வெண்மையும் கலந்த நிறத்தைக் காட்டினால், சிலேத்தும வாத தோஷங்கள் அதிகமானதைக் குறிக்கும். இது பல நாட்களுக்குமுன் வெப்பத்தினாலுண்டானதென்பர். சுரநோயால் பீடிக்கப்பட்டவர்களும் கிழவர்களும் பாதிககப்படுவார்கள்( கபத்தைத் தரக்கூடிய உணவுண்பதால் இகெர்டிய நீர் உண்டாகும்.

வெண்மை நிறமுள்ள சிறுநீரின் வேற்றுமை: நீர் வெண்மையாயும், தெளிந்துமிருந்தால், சுத்த சீதளத்தால் உண்டானதாகும். மருந்துகளினால் இதைக் கட்டுப்படுத்த முடியாது, இந்நீருள்ளவன் கடல் அலையில் சிக்கியவனைப் போல பிழைப்பது அரிது நீர் அதிகமாக வெளுத்தும் சளியைப்போலுமிருந்தால் அது கபத்தின் கொதிப்பாலானது. அது பாலின் நிறத்தை அடைந்தால எலும்பை உருக்கியதாலேற்படும் சிறுநீராகும். முடிவில் இது எலும்புருக்கி நோயைப் புலப்படுத்துகின்றது. சிறுநீர் சீழ் கலந்து துர்நாற்றம் வீசினால் கருப்புப் பையினுள்ளும், கொப்பூழிடத்தினுள்ளும், ஆண்குறித் துளையினுள்ளும் புண் இருப்பதைக் காட்டும். அவ்வாறு புண் இல்லையானால் கல்லடைப்பு நோயுண்டாகுமென்று அறிந்து கொள்ளலாம்,

கபம்-சந்நிபாதம்: விந்தைப்போன்று இறங்கும் சிறுநீர் மேகநோய், சந்நிநோய் இரண்டையுங் குறிக்கும்.

உப்பு: சிறுநீர் விட்ட இடத்தில் உப்பு உறையும், அப்படி உறையாவிட்டால் அந்நீர் கெடுதியை விளைவிக்கும். சிறுநீர் மோரைப்போலவும், பாலைப்போலவும் தனித்தனி இறங்கினால் கொடிய வெப்பத்தினால் உண்டான சுற்றுவலைப் போன்றதாகும்.

வெப்பம்: நீர் கெட்டுப்போன புலாலைக் கழுவின நீரின் நிறத்தை யொக்குமானால், குண்டிக்காயின் வன்மை

கெட்டுப் போனதாலுண்டாவதாகும். இக்குறைவு கோழையும், குருதியும், கொதிப்படைந்ததனால் ஆகும். தடிப்பாயிருக்கும் சிறுநீரும், நெய்ப்பசையை ஒத்திருக்கும் சிறுநீரும் மிகக் கொடிய தன்மையைக் காட்டும்.

**நிற இலக்கணம் வாதப்பிணி:—** சிறுநீர் வெண்மையாகவும், உதிரத்தின் நிறத்தையும் அடைந்தால் வாத நோயைத் தரும்.

**பித்தப்பிணி:** சிறுநீர் பழுத்த பொம்மன்மாசுப் பழத்தின் நிறத்தையுங், கனமுள்ள சௌவீரத்தின் ஒளியின் நிறத்தையும், எள் நெய்யின் நிறத்தையும் அடைந்தால் பித்த நோயைத் தருமென்று "சித்தசாரனவம்" என்னும் நூல் கூறுகிறது.

**பித்த காமாலை:** சிறுநீர் மஞ்சள் (பித்தம்) நிறமாயும் தள்ளப்பட்ட உதிரத்தினை ஒத்ததாமிருக்குமானால், பித்த காமாலை நோயால் பிறந்தனவென்று "சித்தியவித்தியாதரம்" என்னும் நூல் கூறுகிறது.

**கபப்பிணி நீர் நிறம்:—** சிறுநீரில் வெண்ணிறமும், நுரையும், குமிழியும் இருக்குமானாலும், அல்லது அது சுத்தநீரைப் போலிருக்குமானாலும், நெய்யைப் போன்று இருப்பினும், அதில் பலநிறங்கள் கலந்து தோன்றினாலும், கபநோய் உண்டாகும்.

**தொந்தப் பிணி நீர் நிறம்:—** தொந்த நிறந்துடன் இழியும் சிறுநீரில் கருமை நிறமும் காணப்படும் என்று வேறு ஒரு சாரார் கூறுவர்.

**மேகநோயின் நீர் நிறம்:** சிறுநீரில் உதிரம் காணப்பட்டால், மேகநோய் அல்லது மகாநோய் உண்டாகுமென்று "நித்திய நாதீயம்" என்னும் நூல் கூறும்.

**சுரப்பிணி நீர் நிறம்:** சுரப்பிணியில், நீர் மஞ்சள் நிறமாக இருக்கும்.

**அசாத்திய நீர் நிறம்:** சுரநோயோ, மேகநோயோ தாக்கியிருக்கும் காலத்தில் சிறுநீர் மிகப்பெருக்கமாக இறங்குமானால் உயிரை நீக்கும்.

**நிறை இலக்கணம்:** கனம் இன்றியும், தெளிவுடனுமிருக்கும் சிறுநீர், சீதள நிலைபெற்று கபத்தை இளக்கலாலுண்டாகியது. இந்நீர் நீர்ப்பையிலும், இந்திரியப் பையிலும், வன்மைக் குறைவால் உண்டானதென்று கொள்ளவேண்டும். நீர் தடித்து இறங்கினால், வாத பித்த கபங்களின் கெடுதலைக்காட்டும். இதனால் வீக்கம் கட்டிகள் உண்டாகும். இவை நாளுக்குநாள் குறைந்தால் நலனாகும். இன்றேல் கொடிய வெப்புப்பிணி பீடிக்கும்.

**இயற்கை நீர்:** மிக்க தடிப்பும், மிக்க தெளிவுமில்லாத சிறுநீர் சுகத்தைக் கொடுக்கும் உடலியற்கை நீராகும். இது மிகவும் நன்று.

**மன இலக்கணம்:** சீதளம் குறைந்த உடலைப் பெற்றவர்களுக்கு, நீர்ப்பெருக்கத்துக்குள்ள நாற்றமுடன், அப்பெருக்கத்தின் நிறம் கனத்தைப் பொறுத்து சிறுநீர் இறங்கும்.

**சிறுநீர்ப்பை. நாளப்புண் நீர்;—** சிறுநீரிலிருந்து கொடிய மணம் வீசினால், மூத்திரப்பை, மூத்திரநாளம் இவற்றில் புண் உள்ளதென்று உணர்க. அல்லது வாத பித்த கபங்களின் கெடுதலே என்று உணர்க. சிறுநீரில் புளிப்பு மணம் மிகுதியாயிருக்குமானால், அது உஷ்ணப் பிணி சம்பந்தப்பட்டதாகும்- அந்த உஷ்ணம் நோயாளியை தீயினின்று உண்டாகும் நீர்போல சீதளத்தில் கொண்டு விடும்.

**இரத்த மிகுதியால் உண்டாகும் நீர்:** சிறுநீர் இனித்த மணம் வீசினால் இரத்தம் மிகுந்து உண்டாகிய விருத்தத்தினாலானது என்க. அல்லது இரத்த விருத்தியால் ஏற்பட்ட பிணிக்கூட்டத்தைச்சார்ந்தது என மருத்துவ நூல் ஆராய்ந்தோரின் கொள்கையாகும்.

**பித்த விகற்ப நீர்:** கருமை நிறமுள்ள மானிடத்து உண்டாகும் மணம் வீசினால், அந்நீர் பித்தத்தின் மாறுபாட்டால் விளைந்ததாகும்.

**உடற்பசை நீர்:** சிறுநீரில் புலால் நாற்றம் வீசுமானால், அது உடற்பசைக் கேட்டினாலாகும். இக்கேடு அப்பொழுதில்லையாயினும், இது உண்டாவதற்குத் தக்க சமயமென்று அறிக. இந்நீர் மிகக் கெடுதலை உண்டாக்குமென்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

**நுரை இலக்கணம்:** உடலுறுதிக்காக இருக்கும் பசை இலகினால், வாயு சிறுநீரில் சம்பந்தப்பட்டு, சிறுநீர் நுரையுடன் இழியும்.

**காமாலை நீர்:** நுரை பொருந்திய அந்நீர் மஞ்சள், கருமை, சிவப்பு நிறங்களைக் காட்டினால், காமாலை நோய் உண்டாகும் என்று ஆராய்ச்சி செய்த வைத்தியர்கள் கூறுவர்.

**வாதம் பித்தம் கபம் மூன்றும் குறையும் நீர்:** சிறுநீர் நுரை குறைந்து இழிந்தால், வாத பித்த கபங்களின் வன்மை குறைந்து வருவதைக் காட்டும.

**பாண்டு நோயைக் காட்டும் சிறுநீர்;** மிக்க அளவில் நீர்ப் பொருள்கள் அடங்கிய உணவை உண்ட போதிலும் சிறுநீர் இயற்கை அளவுக்குக் குறைவாக இருக்குமானால் பாண்டு நோயைக் காட்டுவதாகும். இந்நோயால் நீக்கக்கூடாத பேதியும், அயர்வும் ஏற்படும்.

## சிறுநீரில் எண்ணெய் விட்டுப் பார்க்குங்குறி

### கடவுள் வணக்கம்

வட ஆலமரத்தின் கீழ் அமர்ந்து ஒப்பற்ற கைக்குறியினால், சின்முத்திரை காட்டி, உண்மைப் பொருள் விளக்கிய

சிவபெருமானை வணங்கி, உடற்குறி நிறக்குறி, ஒலிக்குறி கண்குறி, நாக்குறி, சிறுநீர்க்குறி, மலக்குறி, கைக்குறி (கையில் நாடிக்குறி) நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்து நோய்களையறியும் நெய்க்குறி நூலை, இப்பெரிய உலகின் கண் சொல்வோம்.

**சிறுநீரில் எண்ணெய் விட்டுப் பார்க்கும் விதி:** சிறு நீரின் நிறத்தின் குறியால் நோயைக் கண்டு பிடிப்பதற்காக கூறிய விதி இது. சிறுநீரில் ஒரு சிறுதுளி எண்ணெயை நடுவில் விட்டு; காற்றினால் எண்ணெய்த்துளி ஆடாதபடி வெய்யிலில் வைத்து அந்த எண்ணெய்த்துளி போகின்ற வழியைக்கண்டு அத்துளி தெரிவிக்கும் குறிகளிலிருந்து நோயை வைத்தியர்கள் உணரவேண்டும்.

**வாதம் (வாயு):** சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி பாம்புபோல் நீளமானால் வாத (வாயு) நோயைக்காட்டும் (வளைவும் கொள்ளப்படல் வேண்டும்)

**பித்தம் (சூடு):** எண்ணெய்த்துளி மோதிரம்போல் வட்ட வளைவாயிருக்குமானால், அந்நீர் பித்த நோயைக் காட்டும்.

**கபம் (நீர்):** எண்ணெய்த்துளி முத்து வடிவத்தைப் போல், பரவாமல் இருந்தால், அது ஐய (நீர்) நோயைக் காட்டும்.

தொந்தக்குறி: சிறுநீரில் எண்ணெய்த்துளி விட்டுப் பார்க்கும்போது பாம்பில் மோதிரமும, மோதிரத்தில் பாம்பும், பாம்பில் முத்தும், மோதிரத்தில் முத்தும் கலந்திருந்தால், அந்நீர் கலப்புக் குற்றத்தாலாய தென்று அறிய வேண்டும்.

முக்குற்றக் குறி: சிறுநீரில் எண்ணெய் விட்டபோது அத்துளி அமுத்தினாலும், முக்குற்றங்களில் தனித்தனி காணப்பட்ட நெய்க்குறிகள் சேர்ந்து காணப்பட்டாலும் முக்குற்றமென்றே உணர்க.

**தீரும்குறி:** சிறுநீரில்துளி எண்ணெய் விடு. இது வட்டமாயும், மெல்லப் பரவலுமாய்க் காணப்பட்டால், எவ்வித நோயும் நீங்கும். சிறுநீரில் விட்ட எள்நெய் திருமாலின் இடது தோளிலிருக்கும் சங்கினைப் போலவும், சிங்காசனத்தைப் போலவும் நின்றால், அந்நீரையுடைய நோயாளியின் உயிர்க்குக் குற்றமில்லை. இன்னும் அந்நெய் குடைபோலவும், யாழைப்போலவும், காணப்பட்டாங் நோயாளி காப்பாற்றப்படலாம். சிறுநீரில் எண்ணெய்த் துளி முல்லை மொட்டுப் போலவும், தாமரைப் பூப்போலவும் காணப்பட்டால், அந்த நீருடையவர்க்கு நோயொன்றுமில்லை.

**தீராக்குறி:** நோயாளியின் சிறுநீரில் எண்ணெய்த் துளியை விடு. அது பொங்கி நீர் முழுதும் பரவினால் நோயாளிக்கு இவ்வுலகில் மருந்தே கிடையாது.

சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி கடுகைப்போல், தனித்தனி சிதறிவிட்டாலும், நோய்க்கு மருந்தில்லை என்க.

அந்த எண்ணெய்த் துளியும், சிறுநீரும் வெவ்வேறாக உணரமுடியாமல் ஒன்றுபடக் கலந்தால், நோயாளியின் உயிர் நீங்குமென்பது கௌதமர் கூற்று.

எள், நெய்த்துளி சிறுநீருக்குள்ளே அமுழ்ந்திவிடுமானால், அந்நோய் தீராதென்று மாதவ கற்பம் என்னும் நூல் கூறுகிறது.

சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி, அம்பு, வாள் இருப்புலக்கை, சூலம், ஈர்வாள், கும்பம், வெற்றிலை ஆகிய இவைகளில் ஒன்றின் குறிப்பாகத் தோன்றினால் இந்த நோய் தீராதென்று உணரவேண்டும்.

எருது, சிங்கம், ஆளி, யானை, புலி, ஆடு, பன்றி மனிதன், பாம்பு, ஆமை, பறவை, நரி, குரங்கு, கழுதை, பூனை, தேள் இவைகளில் ஏதேனும் ஒன்றாகத் தோன்றினாலும், நோய் தீருமென்று சொல்வதற்கில்லை.

**தீரும் தீராக்குறி:** சிறுநீரில் விடும் எண்ணெய்த்துளி விரைந்து பல கண்களையுடைய சல்லடைபோல் தோன்றினால், நோயாளியின் நாடியைப் பார்க்க வேண்டாமென்று கௌதமர் கூறுகிறார். இருப்பினும், உடலில் கபம் இருந்தாலும் அம்மாதிரி குறி காணப்படுதலால், நோயாளியின் நோய் தீருமென்று சொல்வாரும் உளர்.

**கரும சாந்தி:** நோய்கள் உண்டாவது கருமத்தால். ஆதலால் சினைார் செய்த கருமகாண்டம் என்னும் நூலில் சொன்னபடி கருமசாந்தி செய்து பின்னர் நோயாளிகள் உயரிய மருந்துகளை உட்கொள்ளலாம். அவர்கள் தங்கள் நோய்கள் நீங்கப்பெற்று தேவர்களைப்போல் அறம், பொருள், இன்பப்பயனை அடைந்து நலமுடன் வாழ்வார்கள்.

**நீர்க்குறி;** வாதநோயால் பீடிக்கப்பட்டவர்கள் சிறுநீர் கடுத்து நொந்து சிறுத்துப் பொருமி விழும், பித்த நோயுற்றவர்களுக்கு, சிறுநீர் பசுமையுடன் சிவந்து எரிச்சலுடன் கடுத்து இறங்கும் கபநோய்க்காரர்களுக்கு சிறுநீர் வெண்மையாயும், உறைந்தும் விழும். தொந்த நோயுடையவர்களின் சிறுநீர் பலநிறமாக அந்தந்தக் குற்றத்தின் சேர்க்கைக்குத் தக்கவாறு இருக்கும்.

வாத நோயுற்றாரின் சிறுநீர் வெளுத்திருக்கும், பித்த நோயுற்றார்க்கும் சிறுநீர் சிவப்பு, மஞ்சளுமாகவிருக்கும். ஐய நோயுற்றார்க்கு சிறுநீர் நுரையைப் போலிருக்கும்,

**நீரின் நெய்க்குறி:** பிணியாளரின் சிறுநீரை ஒரு கண்ணாடிக் குப்பியில் பிடித்து சூரியன் முன்னர் வைக்க வேண்டும். ஒரு துரும்பில் எண்ணெய் தோய்த்து, ஒரு துளி எண்ணெயை அந்நீரில் விடவும். அத்துளி நீரில் சேர்ந்து பாம்பின் வடிவம் போல் நீண்டு சிறிது வளைந்தும் காணப்பட்டால் வாதநோய் என்றும், மோதிரம்போல் இடைவிட்ட வட்டமாகக் காணப்பட்டால் பித்தநோய்

என்றும், முத்துபோன்று இருந்தால் (ஐயநோய்) சீதள நோயென்றும் அறியவேண்டும்.

**வாதபித்தப், கபவாத முடையாரின் சிறுநீர் நெய்க் குறி:** தொந்த நோயுடையார் சிறுநீரில்விட்ட எண்ணெய்த் துளி புல்முனை போல் பரவினால் வாதபித்த கலப்பு நோயாகும். சுந்துருபோல் பரவினால் கபவாதக் கலப்பு நோயாகும்.

**பித்த கபநீர் சந்நிவாத முடையோரின் சிறுநீர் நெய்க் குறி:** பித்த கப நோயுடையோரின் சிறுநீரில் விடும் எண்ணெய்துளி பாதி மேலும் பாதி கீழுமிருக்கும்.

சந்நிவாத நோயுடையாரின் சிறுநீரில விடும் எண்ணெய்த்துளி நீரிலுள்ளே அழுந்திவிடும். இந்நிலை நோயாளி பிழைப்பது அரிது என்பதை உணர்த்தும்.

சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி கண்ணாடி, சிங்கம், பறவை, ஆமை, செந்நாய், குக்குடம். வராகம், வானரம், பூனை, தேள் அரசர் கையிலிருக்கும் சூலம் போல பரவிக் காட்டினால், அந்நீரையுடையாரின நோய் தீரவே தீராது.

**தீரும் நோயின் குறிகள்:** சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி, சங்கு, வீணை, பிசாசு, சிவன் வில், கொடி போல் பரவியிருந்தால், அந்த நோய் தீரும்.

**தீரும் நோய் தீரா நோய்:** நோயாளி இரவில் தூங்கி விடியற்காலையில் விடும் சிறுநீரை ஒரு கண்ணாடிக் குவளையில் பிடித்து அதை வெய்யிலில் வை. அதில் ஒரு துளி எண்ணெய்விட்டு அது பரவும் வகையைக் கவனி. அது நன்றாய்ப் பரவினால் நோயாளியின் நோய் தீரும். மெல்லப்பரவினால் மெல்லத்தீரும் என்றும் விட்ட துளி விட்டபடியே பரவாமல் இருக்குமானால், அந்நோய் எவராலும் தீர்க்க முடியாது என்றும் உரைரவேண்டும்.

**வாதபித்தம் காமாலை நீர்கள்:** உண்மையான மருத்துவ நூல்கள் நோயாளிகளின் சிறுநீர்க் குறிகளை ஆராய்ந்து உடலிலுள்ள நோய்களைக் கண்டறியலாமென கூறுகின்றன. வாதநோய்க்காரருக்கு சிறுநீர் வெண்மையாயிருக்கும். பித்த நோய்க்காரருக்கு, சிறிதளவு சிவந்த மஞ்சள் நிறமாயிருக்கும். மஞ்சள் காமாலை நோயுற்றார்க்கு மிக்க செம்மஞ்சள் நிறமாயிருக்கும்.

**கப வாத பித்தங்களின் நெய்க்குறி:** கபநோயால் பீடிக்கப்பட்டவரின் சிறுநீர் நுரைபோலிருக்கும். அந்த நீரில் விடப்பட்ட எண்ணெய்த்துளி நீளமானால் வாத நோயாகும். அது தெறித்தோட்டினால் பித்த நோயாகும்,

**கபம் மூக்குற்றம் சார்பான நெய்க்குறி:** முற்கூறிய கபநோய்க்காரரின் சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி சல்லடைக்கண் போல் தோன்றும். முக்குற்ற நோயாளியின் சிறுநீரில் விடப்பட்ட எண்ணெய்த்துளி மூன்று குறிகளையும் கலந்து காட்டும். தீராத நோயுடையார்க்கு எண்ணெய்த்துளி பரவாமல் விட்டபடியே நிற்கும். அது மெல்லப் பரவினால் நோய் தீரும் குறியைக் காட்டும்.

குறிப்பு: எண்ணெய்த்துளி, சல்லடைக்கண் போல் காணப்படுவதை தீரா நோய்க்குறி என்று கௌதமர் கூறியபோதிலும், தேரர் அக்கொள்கையை மறுத்து அது கபத்தின் குறியேயாதலால் தீரும் நோய்க்குறியே என்றுங் கூறியுள்ளார்.

**தீரா நோய்க்குறி.** சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி அதில் அமிழ்ந்து போனால், அந்நோய் தீராது. கண்ணாடிக் குவளையிலன்றி மட்பாண்டத்திலும் நீரைப்பிடித்து எண்ணெய்த்துளி விட்டுப் பார்க்கலாம்.

**தீரு நோய்க்குறி:** நோயாளியின் சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி சீழ்க்கண்டைவைபோல் மனிதன், மீன்

கோவில், கோவில் மதில் சுற்று, பெரியயானை, மலை, குடை, மரம், வெண்சாமரை, தாமரைப்பூ, யானையின் கொம்பு, குல்லாய், சங்கு கண்ணாடி, மகர தோரணங்கள், பூமி, வீணை, சதுரமாயிருக்கின்ற வீடு, பாகல் இலை, வண்டு, தாமரை, மொக்கு, சிம்மாசனம் போல் காணப்படுமானால் நோய் தீரும். மேலும் சிறுநீரில் விடப்பட்ட எண்ணெய்த்துளி மத்தளம், கொடி, பானை, பன்றி, காட்டு விலங்கு, குயவன் சக்கரம் போல் தோன்றினால் நோய் தாமத சாத்தியமாகும்.

**தீரா நோயின் குறிகள்:** நோயாளியின் சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி, கீழ்க்கண்டவைப்போல் தோன்றும்.

ஒருகால், மூன்று கால்கள், நான்கு கால்களையுடைய மனிதர், உடல் பருத்த மனிதர், தலையில்லா மனிதர், முன் கையில் கத்தி, சூலம், உலக்கை, வில், அரிவாள், பாம்பு, பூனை, எலி, அம்பு, நண்டு, சுரைககாய், கோழி, புலி, குரங்கு, சிங்கம், குதிரை, வெற்றிலைக்கொடி, எருது, கரடி, பறவை, ஆமை, தேள், எண்ணெய்த்துளி பரவாமை, பொங்கிப் பரவல், இவை காணப்பட்டால், நோய் தீராது. இக்குறிகள் யாவும் அகத்திய முனிவரால் கூறப்பட்டுள்ளவை.

## வேறு

**சந்நிவாத நோயும், தீரும் நோயும்:** நோயாளியின் சிறுநீரில் துரும்பாலிட்ட எண்ணெய்த்துளி பாதி மிதந்து பாதி கீழிறங்குமாயின், அவன் நோய் சந்நிவாத நோயாய் மாறும். அவ்வெண்ணெய்த்துளி சதுர வடிவமாகவும், தாமரை கண்ணாடி, குடை, சங்கு, தேர்ச்சக்கரம், சாய்ந்த மரம். குண்டலி போலவும் தோன்றினால் அந்நோய் தீருமெனக் கொள்ளலாம்.

**தீரும் குறியும், தீராக்குறியும்:** நோயாளியின் சிறு நீரில் விட்ட எண்ணெய்த்துளி சோற்றுக்கும்பம், குள்ளன், வெற்றிலை, குதிரை, எருதுபோல் தோன்றின் அவனிட முள்ள நோய்கள் தீர்ந்து இனிதே வாழ்வான். பறவை, ஆமை, நாய், சிங்கம், பன்றி, பாம்பு, குரங்கு, தேள், பூனை மனிதன்போல் தோன்றினால், நோயாளி இறந்தான் என்றே கொள்ளல் நன்று.

மேலும் சிறுநீரில் விட்ட எண்ணெய் தலையில்லா முண்டம்போல் தோன்றின் இறப்பான் என்றும், ஒரு நாம வட்டம்போல் தோன்றின் இறவான் என்றும் அறிதல் வேண்டும்.

## வேறு

**சுரநீர் விகற்பம்;** சுரநோயால் பீடிக்கப்பட்டவனின் சிறுநீர் தெளிவாயிருந்தால், வாத நோயால் பாதிக்கப் படுவான் சுருக்காகவும், பச்சை நிறமுடையதாகவுமிருந் தால், அச்சுரநோய் பித்தவெட்டை காரணமாய் வந்ததா கும். சிவப்பு நிறமுடையதாயிருந்தால், தோஷம் அல்லது சந்நி உண்டாகும். சுரமுடையவன் சிறுநீரில் சுண்ணம் போல் படிந்திருக்குமாயின், அந்நோய் தீராது.

**சிறுநீர்ப் பெருக்கம்;** உண்ணும் நீர் பெரங்கி, உடற் கருவிகளில் தங்காமல் நீர்ப்பையிலேயே தங்கி, பலப்பல நிறமாக இடைவிடாது சிறுநீர் இழியுமானால், உடலுக்குக் கெடுதியை விளைவிக்கும்.

**மேகநீர்:** சிறுநீர் விடப்பட்ட இடத்தில் சுண்ணம் படிந்திருந்தால், எலும்புருக்கி நோய் உண்டாயிருக்க வேண்டும். நீர் கலந்த மோர் அல்லது நெய் போலும் படிந்திருந்தால் மேகவெட்டை நோய் காரணமாகும். இழிவதற்கு முன்னும், பின்னும், நீர்த்தொளை அடைந்தி டின் பிரமியம் காரணமாகும். இழிந்த சிறுநீரில் எறும்புக

ளும், ஈக்களும் மொய்த்தால், அந்நீரையுடையவனின் நோய் தீராது.

**சிறுநீர் இலக்கணம்:** சிறுநீர் தெளிந்திருந்தால் வாத நோய் காரணமாகும். மஞ்சள் நிறத்திலிருந்தால் பித்த நோய் காரணமாகும். வெண்மையாய் நுரைத்திருந்தால் கபநோய் காரணமாகும். கலந்திருந்தால் தொந்தநோய் காரணமாகும்.

**நீர்க்குறிச் சிறப்பு:** வைத்தியர்களுக்கு நாடிக் குறிகளைக்கொண்டு நோயைக் கணிப்பது மயக்கத்தைக் கொடுத்தால், அவற்றைவிட நீர்க்குறிகள்தான் இன்ன நோயென்றறிய சிறப்பானவை.

**இரத்தக்கொதிப்பு நீர்:** சிறுநீர் சிவந்திருந்தால், அது இரத்தக் கொதிப்பால் உண்டான நீரென அறிதல் வேண்டும், உஷ்ண மிகுதியினால் கொதிப்பு ஏற்பட்டு, நீர் சுருங்குவதனால் இக்குறி தென்படும்.

**பித்த கோபநீர்:** முற்கூறிய சிறுநீர், மிகச் சிவந்திருந்தால், அது பித்த மிகுதி காரணத்தால் உண்டாகும். மூலச் சூட்டால் எரிந்து சிவப்பாய்த் தோன்றிற்றென்றும் சொல்லலாம்.

**சேத்தும கோபநீர்:—** சிறுநீர் அளவில் குறைந்து வெண்மையாயிருந்தால் அது சேத்துமத்தால் உண்டாகும். குளிர்ச்சியினால் வெண்மை நிறமாகலாம். இரத்தக் குற்றத்தால் அளவிலும் குறையலாம்.

**வாதகோப நீர்;—** சிறுநீர் வெண்மையாயிருந்து தெளிந்துமிருந்தால், அது வாத மிகுதியினால் உண்டாயிருக்கும். குளிர்ச்சியினால் வெண்மை நிறமும், வறட்சியினால் தெளிவும் ஏற்பட்டதெனக் கொள்ளல் வேண்டும்.

**இரத்தவாத பித்தக் கலப்புநீர்;** சிறுநீர் கனத்தும் இறுகலாயுமிருக்குமானால் அஃது இரத்தக் கொதிப்பால்

ஏற்பட்ட நீராகும். தசை மென்மையாகக் கரைந்து சிறு நீரில் கலந்து வெளிப்பட்டால் பித்த வாதக் கலப்பால் ஏற்பட்டதாகும்.

**வயது, காலம், நட்சத்திரங்களினால் சிறுநீரின் மாற்றம்:** இதுவரை சொல்லப்பட்ட சிறுநீர்க்குறிகள், வயதினாலும், பருவத்தினாலும், நட்சத்திரங்களின் மாற்றத்தினாலும், பித்தம் மிஞ்சினதால் ஏற்பட்ட குறிகளாகும்.

**உஷ்ண நீர்:** சுரத்தால் பீடிக்கப்பட்டவரின் சிறுநீர் வெள்ளை நிறத்துடனும் உவர் பொருந்தித் தெளிந்திருந்தாலும், அது உஷ்ணத்தினாலாயது.

**முறைக்காய்ச்சல் நீர்:** முறைக்காய்ச்சலுள்ளவர்களின் சிறுநீர் கனத்திருந்தால், அக்காய்ச்சல் விரைவில் குணப்படும்.

சிறுநீர் சிவந்து மிகவும் தெளிவுற்றிருந்தால், அந்நீர் மூன்று நாளைக்கொருதரம் வரும் காய்ச்சலாகும். அந்நீர் இறுகிச் சிவந்து, பின்பு வெள்ளையானால், அந்நீரையுடைய நோயாளிக்குக் கபாலத்தில் பித்தம் போய்அடையும்.

**தலைக்கனப்பு, மயக்கம்:** கண்ணாடிக்குவளையில் விட்ட சிறுநீர்ப்பரப்பில், வளையம்போல் பரந்து நின்றால் அந்நீருடையவர் தலை கனத்து மயக்கமடைந்திருப்பார் என மருத்துவ நூல் ஆராய்ந்தோர் சொல்லுவார்கள்.

**தலையின் இடப்பக்கநோய்:** கண்ணாடிக் குவளையில் பிடித்து வைத்த சிறுநீர் அதன் அடியிற் சிவப்பாயிருந்தாலும், மஞ்சளாயிருந்தாலும். தெளிவுற்றிருந்தாலும், தலையின் இடது பக்கம் நோயால் பீடிக்கப்பட்டதென்று உணர்க.

**தலையின் வலப்பக்க நோய்:** சுரமுடையோர்க்குச் சிறுநீர் வெண்மையாயும், கருப்புமாகித் தெளிந்திருந்தால்

நோயாளிக்குத் தலையின் வலப்பக்கத்தில், துன்பத்தைக் கொடுக்கும் நோயுண்டென்று விளக்கமாய்ச் சொல்லலாம்.

**காய்ச்சலுடன் கூடிய மார்புநோயைக் காட்டும் நீரின் நிறம்:** பாத்திரத்தில் பிடித்துவைத்த நீரின் அடிப்பாதி சிவந்து, கலங்கியும், மேற்பாதி தெளிவுற்றுமிருந்தால் அந்நீரையுடையவனுக்கு நெஞ்சுவலி, காய்ச்சல் இருக்கும் என்று மருத்துவ நூல்வல்லோர் கூறுவர்.

**நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பின் அதையுணர்த்தும் நீர்;** சிறுநீர் தயிர்நீர் அல்லது பால்போல் இழிந்து அதன் அடியில் வண்டல் இருந்தாலும் அந்நீரையுடையவருககு நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பதால் ஏற்பட்டதென்று சொல்லலாம்,

## இரத்த தொந்த நோய்

**ஈரல் சுரம்:** சிறுநீர் சிவந்து சிறிது தெளிவுற்றிருந்தால், அது இரத்த தொந்திப்பாலுண்டானது. அது கலங்கிச் சிறிது கருத்திருக்குமாயின், வெப்பம் ஈரலைத் தாக்கியதாலுண்டான காய்ச்சல் என்று அறியவேண்டும்.

**இருதய நோய்:** சிறுநீர் தலைமுடியின் நிறத்தை யொத்தால், தமரகப் பிணியுண்டாகுமென்று சொல்லுவர்.

**நெய்க்குறி (வேறு):—** சிறுநீரின் குணங்களைக் கொண்டு நோய்களையறிய மற்றொரு சோதனையாகிய நெய்க்குறி கூறப்படும்.

**சிறுநீரைச்சேகரிக்கும் நேரம்:—** விடியற்காலத்தில் காலை 4 மணிக்கு விடும் சிறுநீரைப் பீங்கானில் பிடித்து வைத்திருந்து, அந்நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்க வேண்டும்.

**இரத்த மிகுந்த வெப்பு:** சிறுநீரில் விட்ட எண்ணெய்த் துளி வீசிப்பரந்து வட்டமாய் நின்றால், இரத்தம் பொங்குதலால் ஏற்பட்டதென்று அறியவேண்டும்.

**இரத்தக் குறைவு:—** எண்ணெய்த்துளி, விரைவில் கதிர்போல் நீண்டால், இரத்தம் கெட்டுக் குறைந்ததாலுண்டானதென்று அறியவேண்டும்.

**பித்த மிகுதி:—** அந்த எண்ணெய்த்துளி கதிர்முனையைப்போல் நீண்டால், பித்தத்தின் மிகுதியால் உண்டானதென்றறிய வேண்டும். இந்நோயில் பேதி உண்டானால் நோய் அற்றுப்போகுமென்று நூல் வல்லோர் கூறுவர்.

**சீதமிகுதி:** எண்ணெய்த்துளி நெகிழ்ச்சி அடையாமல் அப்படியே நின்றால் சீதமிகுதியால் உண்டானதென்று அறியவேண்டும்.

**நோய் தீராக்குறி** சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி நீரினுள் அமிழ்ந்தால் அந்நீரையுடையவனின் நோய் தீருவது அரிது.

**குளிர்மை:—** நாவரட்சி இல்லாமலும், உடம்பில் குளிரிருந்தாலும், உடலில் நடுக்கமிருந்தாலும், வாயில் நீர் ஊறினாலும், உடல், கை, கால் வெளுப்பினாலும் இரவிலே அதிக நீர் கழிந்தாலும், உடலின் மிக்க சீதளத்தைக் குறிக்குமென்பர்.

**முலைப்பால் குறி:** நோயாளியின் சிறுநீரில், ஆண் பிள்ளையைப்பெற்ற தாயின் முலைப்பாலை விடு. இது அச்சிறுநீரில் கலந்தால், நோய் தீரும். கலவாவிட்டால் நோயாளி இறப்பான் என்றும் கொள்க.

**மரணமறிய:** நோயாளியின் காலின் மேல்புறமும் கீழ்ப்புறமும், பன்றியின் கொழுப்பைத் தடவவும், பின்பு

அதை வழித்து நாய்க்கு இடு. நாய் அதைத்தின்று சீரணித்துக்கொண்டால், நோயாளி பிழைப்பான் என்க. நாய் சீரணிக்காமல் வாந்தி செய்தால், நோயாளியின் நோய் தீர்தலரிது.

**குருதிக்குறி:** நோயாளியின் இரத்தத்தில் இருதுளியைக் குளிர்ந்த நீரில் விடு. அஃது உள்ளே அழுந்தின் நன்றென்றும், நெகிழுமாயின் மரணம் நேரிடுமென்றும் அறிக.

**சிறுநீர் சோதனை:** நோயாளியின் சிறுநீர் மஞ்சள் நிறமாயிருந்தால் அஃது உத்தமம். தேன் போன்ற நிறமாயிருந்தால் மத்திமம். பால்போல் வெண்ணிறமாயிருந்தால், அதமாதமமாகும்

# நோயும், சிறுநீர் விகற்பமும்.

## அகர வரிசை

| நோய் | | சிறுநீர் விகற்பம் |
|---|---|---|
| அசீரணம் | ... | சிறுநீர் நனைந்துாறிய வைக்கோலி லிருந்து ஒழுகும் நிறத்தைப் போன்று இருக்கும். |
| அசாத்தியம் | ... | சிறுநீரில் சுண்ணம் படிந்திருக்கும். |
| ,, | ... | சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப்பார்க்கில், எண்ணெய்த் துளி சிறுநீரில் அழுந்தும். |
| இரத்தக்கொதிப்பு | ... | சிறுநீர் மிக்க செந்நிறமாகிய பன்னீர்ப் பூப்போன்று இருக்கும். |
| ,, | ... | சிறுநீர் கனத்து இறுகலாக இருக்கும். |
| ,, | ... | சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப் பார்க்கில், எண்ணெய்த் துளி வீசிப்பரந்து வட்டமாக இருக்கும். |
| இரத்தம் பொங்குதல் | ... | சிறுநீர் செம்மையும், கருமையும் பொருந்தி இருக்கும். |
| | ... | சிறுநீர் கறுப்பும், சிறிதுசெம்மையும், கலந்து இருக்கும்; அன்றித் தனித்த சிவப்பு நிறமாகவும் இருக்கலாம். |
| இரத்தக்கெடுதி அல்லது குறைவு | ... | சிறுநீர் குங்குமப்பூ நிறத்துடன் கருநிறமும், சிறிது செம்மையும் கலந்து இருக்கும். |

| | |
|---|---|
| ,, ... | சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த் துளி திரைபோல் நீண்டிருக்கும். |
| இரத்த தொந்திப்பு ... | சிறுநீர் சிவந்து தெளிவுற்றிருக்கும். |
| இதய நோய் (தமரகப் பிணி) ... | சிறுநீர் தலைமுடியின் நிறமாயிருக்கும். |
| இடத்தலை நோய் ... | சிறுநீர் மஞ்சளாகவும், சிவப்பாகவும் தெளிவாகவும் இருக்கும், |
| ஈரல் வெப்பம் ... | சிறுநீர் கலங்கிக் கருத்திருக்கும். |
| உஷ்ணம் ... | சிறுநீர் காட்டு நாரத்தம் பழத் தோலின் நிறமாயிருக்கும், |
| ... | சிறுநீர் புளியின் மணமாயிருக்கும். |
| ... | சிறுநீர் வெண்மையாகவும், உவர் பொருந்தித் தெளிந்து மிகுந்திருக்கும். |
| உஷ்ணம் (அதிகம்) ... | சிறுநீர் கொதிக்கின்ற தீயின் நிறத்தைப்போன்று இருக்கும். |
| உஷ்ணம் (உச்சநிலை) ... | சிறுநீரில் மஞ்சள் நிறமும், குங்குமப்பூ நிறமும், வரிவரியாகக் காணும். |
| உஷ்ணம் (கொடிய) ... | சிறுநீர் மோரைப்போலும் பாலைப்போலும் நிறத்தையுடையதாயிருக்கும். |
| உதிரவிருத்தி அல்லது உதிரவிருத்தியாலாகிய பிணி ... | சிறுநீர் இனித்த மணமாயிருக்கும் |
| உடற்பசைக்கேடு ... | சிறுநீர் புலால் மணம் வீசும், |
| அவலம்பகம், தருப்பகம் கிலேதகம், சந்திகம போதகம் ... | சிறுநீரில் வாயு சம்பந்தப்பட்டு நுரையுடன் இழிதலாகும். |

| | |
|---|---|
| உடற்கேடு | ... சிறுநீர் அடிக்கடி இழியும். |
| எலும்புருக்கி | ... சிறுநீர் பால்போன்று இருக்கும். |
| ,, | ... சிறுநீரில் சுண்ணம் படிந்திருக்கும். |
| கபம் | ... சிறுநீர் இலைப்பச்சை நிறமாயிருக்கும். |
| ,, | ... சிறுநீர் வெளுத்தும், சளியைப் போன்றும் இருக்கும். |
| ,, | ... சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த் துளி முத்துப்போன்றிருக்கும். |
| ,, | ... சிறுநீர் வெண்மையாக உறைந்திருக்கும். |
| ,, | ... சிறுநீர் நுரை பொருந்தியிருக்கும். |
| ,, | ... சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த் துளி சல்லடைக்கண் போற் காணும். |
| ,, | ... சிறுநீர் வெண்மையாகவும், அளவில் குறைந்தும் இருக்கும். |
| ,, | ... சிறுநீர் வெண்ணிறத்துடன் நுரையும், குமிழும், குடிநீர் போன்றும் நெய்யைப்போலப் பல நிறமாகவும் காணும். |
| கபவாதக் கலப்பு | ... சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த் துளி கந்துருபோல் பரவிக் காணும். |
| கபால பித்தம் | ... சிறுநீர் இறுகிச் சிவந்து பின் வெண்மையாகும். |
| கருப்பைப் புண் | ... சிறுநீர் சீயும், துர்நாற்றமுமாயிருக்கும். |

| | | |
|---|---|---|
| கல்லடைப்பு நோய் | ... | சிறுநீர் சீயும். துர்நாற்றமுமாயிருக்கும். |
| காமாலை | ... | சிறுநீர் குங்குமப்பூ நிறத்துள் கருமை கலந்து இருக்கும். |
| ,, | ... | சிறுநீர் மஞ்சள், கருமை, செம்மை நிறங்களுடன் நுரை பொருந்தி இருக்கும். |
| | ... | சிறுநீர் மிக்க செம்மஞ்சளாக இருக்கும். |
| குண்டிக்காய் வண்மைக் குறைவு | ... | சிறுநீர் கெட்டுப்போன தசையைக் கழுவிய நிறத்தையுடையதாயிருக்கும், |
| குருதிக் கொதிப்பு | ... | சிறுநீர் கெட்டுப்போன தசையைக் கழுவிய நிறத்தையுடையதாயிருக்கும். |
| கொடிய நோய் | ... | சிறுநீர் கனப்பாகவும், நெய்ப்பசையாகவும் இருக்கும். |
| கோழை கொதிப்பு | ... | சிறுநீர் கெட்டுப்போன தசையைக் கழுவிய நிறத்தையுடையதாயிருக்கும்: |
| கோழை நோய் | ... | சிறுநீர் இந்திரியத்தைப் போன்று இருக்கும். |
| சன்னி | ... | சிறுநீர் சிவத்திருக்கும். |
| சன்னிவாதம் | ... | சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த் துளி சிறுநீரில் அழுந்தும். |
| | ... | சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த் துளி பாதி கீழ் அழுந்தியும், பாதி மேல் மிதந்தும் தோன்றும். |

| | |
|---|---|
| சாத்தியம் (தாமத) ... | சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த் துளி மத்தளம், கொடி, பானை பன்றி, காட்டுவிலங்கு இவைகளைப்போற் காணும். |
| சீரண பக்குவம் ... | சிறுநீர் துரிஞ்சிப்பழத்தின் நிறத்தையுடையதாயிருக்கும். |
| சீதளம் ... | சிறுநீர் கருப்பும், சிறிது பச்சையுமான நிறத்தையுடையதாக இருக்கும், |
| சீதள (மிகுதி) ... | சிறுநீர் நீலச்சாயை பொருந்தியிருக்கும். |
| ,, ... | சிறுநீர் கனமின்றித் தெளிந்திருக்கும். |
| ,, ... | சிறுநீர் தெளிந்தும், இரவில் அதிகமாகவும் இழிதலாகும். |
| சுத்த சீதளம் ... | சிறுநீர் வெண்ணிறத்துடன் தெளிந்திருக்கும். |
| சுரம் ... | சிறுநீர் மஞ்சள் நிறமாயிருக்கும். |
| தமரக நோய் ... | சிறுநீர் தலைமுடியின் நிறமாயிருக்கும். |
| தலைக்கனப்பு, மயக்கம் ... | சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப்பார்க்கில் எண்ணெய்த் துளி வளையம்போற் காணும். |
| தொந்த நோய் ... | சிறுநீர் பல நிறமாக இருக்கும். |
| நீர்க் குண்டிக்காயில் கல் ... | சிறுநீர் தயிர்த்தெளிவைப்போலும் பாலைப் போலும் அடியில் வண்டல் காணப்படும். |
| பாண்டுநோய் ... | சிறுநீர் இயற்கை அளவுக்குக் குறைந்திழிதல். |

| | | |
|---|---|---|
| பித்தம் | ... | சிறுநீர் கனிந்த பொய்மன் மாகுப் பழம், சௌவீரத்தின் ஒளி, எள் நிறம் இவற்றைப்போற்காணும். |
| ,, | ... | சிறுநீர் கருநிறமானின் மணமுடையதாயிருக்கும். |
| ,, | ... | சிறுநீரில் எண்ணெய்த் துளியை விட்டுப் பார்க்கில் எண்ணெய்த் துளி மோதிரம் போன்று காணும். |
| ,, | ... | மேற்படி கதிர்முனை போல் காணும். |
| ,, | ... | சிறுநீர் பசுமையாகச் சிவந்து எரிச்சலுடன் கடுத்திறங்கும். |
| ,, | ... | சிறுநீர் சிவப்பு மஞ்சளாக இருக்கும். |
| ,, | ... | சிறுநீர் மஞ்சளித்திருக்கும். |
| ,, | ... | சிறுநீர் மிகவும் சிவந்திருக்கும். |
| பித்த கபம் | ... | கிறுநீரில் எண்ணெயத் துளியை விட்டுப் பார்க்கில் சிறுநீரில் பாதி மேலும் பாதி கீழுமாக இருக்கும்: |
| பித்த காமாலை | ... | சிறுநீர் மஞ்சள் நிறமாகவும் உதிரத்தையொத்த நிறமாகவும் இருக்கும். |
| பித்தவாதக் கலப்பு | ... | சிறுநீரில் தசை கரைந்து வெளிப்படும். |
| பிரமிய நோய் | ... | சிறுநீர் போகும் முன்னும் பின்னும் நீர்த்துவாரம் அடைக்கும். |
| மார்பு வலி | ... | சிறுநீரைப் பாத்திரத்தில் பிடித்து வைக்க அடிப்பாதி சிவந்து கலங்கியும் மேற்பாதி தெளிந்துமிருக்கும். |

| | | |
|---|---|---|
| முறைக்காய்ச்சல் | ... | சிறுநீர் சிவந்து தெளிந்திருக்கும். |
| மூலச்சூடு | ... | சிறுநீர் மிகவும் சிவந்திருக்கும். |
| மேகநோய் | ... | சிறுநீரில் உதிரம் வெளிப்படும். |
| மேகவெட்டை | ... | சிறுநீரில் நீர்கலந்த மோர்போலும் நெய்யைப் போலும் படிந்திருக்கும். |
| வலத்தலை நோய் | ... | சிறுநீரைப் பாத்திரத்தில் பிடித்து வைக்க வெண்மையாகவும் கருப்பாகவும், தெளிவுற்றுமிருக்கும், |
| வாதம் | ... | சிறுநீர் வெண்ணிறத்தையும், உதிர நிறத்தையும் உடையதாகயிருக்கும். |
| ,, | ... | சிறுநீரில் எண்ணெய்த்துளியை விட்டுப்பார்க்கில் அது பாம்பு போல் நீளமாய்க்காணும். |
| ,, | ... | சிறுநீர் கடுத்து நொந்து சிறுத்துட் பொருமி இழியும். |
| ,, | ... | சிறுநீர் சுரத்துடன் தெளிந்தநீர் இழிதல். |
| வாத பித்த கபம் | ... | சிறுநீர் நீலநிறத்துடன் தடித்துக் காணும். |
| ,, | ... | சிறுநீர் மிக்கத் தடித்திழியும், |
| ,, | ... | சிறுநீர் கொடிய மணம் வீசும். |
| ,, | ... | சிறுநீர் நுரை குறைந்திழியும். |
| வாத பித்த கலப்பு | ... | சிறுநீர் எண்ணெய்த்துளியை விட்டுப் பார்க்கில் புல் முனையைப் போற் காணும். |
| விஷத்தாலாகிய சீதளம் | ... | சிறுநீர் ஆகாயத்தை யொத்த நிறமாக இருக்கும். |

# தீரும் நோய்

1 சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி வட்டமாகவும் பரவலாகவும் காணில்.

2 திருமால் இடத்தோளிலுள்ள சங்கு, சிங்காசனம் போற் காணில்.

3 குடை, யாழ் போற் காணில்.

4 முல்லைமொட்டு, தாமரைப்பூப்போற் காணில்.

5 சங்கு, வீணை, குறியவள் உருவம், வில், கொடிபோல் பரவிக் காணில்.

6 வைபவம், மக்கள், மீன், கோயில், பெரிய யானை போற் காணில்.

7 மலை, குடை, விருக்கம், வெண்சாமரை, தாமரைப்பூ, யானையின் கொம்பு, குல்லாய், கண்ணாடி, சங்கு மகரதோரணம், பூமி, வீணை, சதுரமான வீடு போற் காணில்.

8 பாகலிலை, வண்டு, தாமரை மொக்கு, சிம்மாசனம் போற்காணில்.

9 சதுரவடிவம், தாமரை மலர், கண்ணாடி. குடை, சங்கு தேர் உருளை, சாய்ந்தமரம், குண்டலி போற்காணில்.

10 சோற்றுக்கும்பம், குள்ளன், வெற்றிலை, குதிரை எருதுபோற் காணில்.

11 நாமவட்டம் போற் காணில்.

12 நோயுற்றார் காலின் மேற்பக்கமும், கீழ்ப்பக்கமும், பன்றியின் கொழுப்பைத் தடவி வழித்து நாய்க்கிட அது உண்டு செரித்திடில்.

13 நோயுற்றார் இரத்தத்தை இரண்டு துளி குளிர்ந்த தண்ணீரில்விட இரத்தம் உள்ளே அழுந்தினால்

# தீராத நோய்

1 எண்ணெய்த்துளி விரைந்து பொங்கிப் பரவிக்காணில்.

2 கடுகைப்போல் சிதறிக்காணில்

3 எண்ணெயும் நீரும் ஒன்று கலந்தால்.

4 எண்ணெய் நீரினுள் அழுந்தினால்.

5 அம்பு, வாள், இருப்புலக்கை, சூலம், ஈர்வாள், கும்பம், வெற்றிலை போற்காணில்.

6 எருது, சிங்கம், ஆளி, யானை, புலி, ஆடு: பன்றி, மனிதன், பாம்பு, ஆமை, பறவை, நரி, குரங்கு, கழுதை பூனை, தேள் போற் காணில்.

7 கண்ணாடி, சிங்கம், பறவை, ஆமை, செந்நாய் குக்குடம், வராகம், வாநரம், பூனை, தேள், அரசர் கைச்சூலம் போலும் பரவிக்காணில்,

8 எண்ணெய்த்துளி சிறுநீரில் அமிழ்ந்தால்.

9 ஒருகால், மூன்றுகால், நான்கு கால்களையுடைய மனிதர் போன்றும், உடல் பருத்த மனிதர் போன்றும் தலையில்லா மனிதர் போன்றும், கையில் கத்தி, சூலம் உலக்கை, வில், அரிவாள், பாம்பு இவைகளைத் தாங்கிய மனிதன் போலும் காணில்.

10 பூனை, எலி, அம்பு, நண்டு, சுரைக்காய், கோழி, புலி குரங்கு, சிங்கம், குதிரை, வெற்றிலைக்கொடி, எருது, கரடி போற் காணில்.

11 பறவை, ஆமை, தேள்போல் காணில்; எண்ணெய்த் துளி பரவாமலிருத்தல், பொங்கிப்பரவல் ஆகிய இவை,

12 சிறுநீரில் ஈ, எறும்பு, மொய்த்தால்.

13 ஆண் பிள்ளையைப் பெற்ற தாயின் முலைப்பாலைப் பிணியாளர் நீரில் விட்டுப் பார்க்கில் அது சிறுநீரில் கலவாவிடில்.

14 நோயுற்றார் காலின் மேற்பக்கமும் கீழ்ப்பக்கமும் பன்றியின் கொழுப்பைத்தடவி வழித்து நாய்க்கிட அது உண்டு செரியாதாகில்.

15 நோயுற்றார் இரத்தத்தை இரண்டு துளி குளிர்ந்த தண்ணீரில் விட, இரத்தம் தண்ணீரில் நெகிழுமாயின்.

குறிப்பு: கண்ணாடி, எருது. வெற்றிலை, குதிரை ஆகிய இத்தோற்றங்கள் மூலப்பாக்களில் நோய்தீரும், நோய் தீராது எனும் இரண்டு தலைப்புக்களிலும் காணப்படுவதால் இவைகள் ஆராய்தற்குரியன.



(சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம், தஞ்சாவூர்-9)